International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 02 April to June 2024 www.irjtsjournal.org

# தமிழர் வாழ்வில் சங்கலிகரணம்

பேராசிரியர் பா.ஷீலா*

*பதிவாளர்*

*அன்னைதெரசாமகளிர்பல்கலைக்கழகம்*

*கொடைக்கானல் 624 101*

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்தம்வாழ்வியலைகலைமற்றும்இலக்கியங்கள்வாயிலாகஉணர்த்தியுள்ளனர்.தமிழர்பண்பாட்டின்சின்னமானகோயில்கள்மற்றும்பொதுக்குளியல்குளங்களில்விலங்குகளின்மேல்மனிதனின்பால்ஈர்ப்பினைக்குறிக்கும்சிற்பங்கள், விலங்குமனிதர்களுடன் புணர்தல் போன்ற சங்கலிகரணச் சிற்பங்கள் (மிருகசஞ்சாரம்) இடம் பெற்றுள்ளன. இத்தகைய மிருகப்புணர்ச்சி வித்தியாசமாக இருப்பினும் உலகம் முழுவதும் பழங்காலந் தொட்டே இருந்துவருகிறது. ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் வாழவழி நல்கும் கோயில்களில் அல்லது பொது இடங்களில் விலங்கினக்காதல் காட்சிகள் இடம் பெறுவது மக்களுக்கு அதைப்பற்றிய அச்சத்தை ஏற்படுத்த வேண்டும், நன்னெறியை வளர்க்க வேண்டும் மw;Wம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயாகும். மிருகங்களோடு புணர்தல் இன்று உலகின் பல்வேறு நாடுகளில் இந்தியா உட்பட சட்டத்திற்குப் புறம்பான செயலாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் தமிழர் வாழ்வியல் நெறிமுறையில் சங்கலிகரணங்கள் உணர்த்தும் கருத்தினை எடுத்தியம் புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

மிருகசஞ்சரம், சங்கலிகரணம், பரியங்கயோகம், சின்னையம்பேட்டை, கலவிச்சிற்பங்கள், விலங்குகள்வதைத் தடுப்புச்சட்டம்.

**முன்னுரை**

சங்கலிகரணம் (Bestiality) என்ற சொல்லுக்கு முறையிலாப் புணர்ச்சி என்று பொருள். அஃதாவது மனிதன் மிருகத்தோடு நாண மில்லாமல் புணர்ச்சி கொள்ளுதலாகும். இதனை மிருகசஞ்சாரம் என்றும் அழைப்பர். சில சமயங்களில் இது மிருகம் மனிதர்களுடன் புணர்தலைக் குறிக்கும். இச்செயல் அருவருக்கத்தக்கது மட்டுமின்றி, உயிர்க் கொலையாகிய பாவத்திற்குரியதாகும். [1]இத்தகைய மிருகப் புணர்ச்சி ஆச்சரியமானதாக, வித்தியாசமானதாக இருப்பினும் உலகம் முழுவதும் குறிப்பாக எகிப்து, கிரேக்கம், ரோம் போன்ற நாடுகளில் பழங்காலந்தொட்டே இருந்து வருவதை ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் வாயிலாக அறிய முடிகிறது.[2]



© 2024, IRJTSR 

**சிந்து சமவெளிநாகரிகம்**

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முந்தைய பழம் பெரும் நாகரிகமான சிந்து சமவெளிநாகரிகத்தைச் சார்ந்த முத்திரை ஒன்றில் சங்கலிகரணம் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இம் முத்திரை ஹரப்பாவில் கிடைத்துள்ளது. இதன் காலம் பொ.ஆ. 2000 ஆகும். இதில் ஒரு பெண் நீண்ட உருளையான தலையமைப் பினையுடைய நீர்வாழ் விலங்குடன் (முதலை அல்லது ஆமை) புணரும் காட்சி காணப்படுகிறது. [3]இது மானுடவியல் சார்ந்த ஒரு இயற்கை வழிபாடாக இருந்திருக்கலாம். இதே அமைப்பினை ஒத்த சிற்பம் தமிழ்நாட்டில் பொ.ஆ. பதினாறாம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் காலசிற்பத்தில் காணப்படுவது குறிப்பிடத்தகுந்ததாகும்.

**இந்து சமயதத்துவம்**

இந்தியா சிற்பக்கலை செறிந்தநாடு. சிற்பங்கள் அக்கால வாழ்வியலை நமக்குப்படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றில் பாலியல் சிற்பங்களும் அடங்கும். மனிதவாழ்வில் பாலியலும் ஒரு பகுதி என்பதே இதன்காரணமாகும். இந்து சமயம்தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நான்கினை மனித வாழ்வின் உயரிய நெறிகளாக வகுத்துள்ளது. [4]இந்தியப் பண்பாட்டின் உயிர் மூச்சாகத்திகழும் ஆன்மீகத்தில் துறவறத்தை விட இல்லறமே பெரிதும் போற்றப்படுகிறது. அவ்வில்லறத்தின் அடையாளமாக வேயோனி வணக்கம், பிறப்பின் குறியீடாக விளங்கும் சிவலிங்கம், பாலியல் தொடர்பான புராணக்கதைகள், சிற்பங்கள் போன்றவை அமைந்துள்ளன. [5]இவற்றிலிருந்து ஓர் ஆணும் பெண்ணும் காமவாழ்க்கைக்காகச் சேரும்சம்பவத்தை இந்து தர்மம்பக்குவமாகத் தெய்வீகமாக்கி அழகுபடுத்தியுள்ளது. சிற்றின்பமே பேரின்பத்திற்கு வழிகாட்டும். பாலுணர்வை அடக்கி ஆள்வதால் சாமானியனைக் காட்டிலும் அதிகத்திறமையினை வெளிப்படுத்த இயலும். [6]இதைத்தான் திருமூலர் சிற்றின்பத்தைப் பேரின்பமாக மாற்றும் பரியங்கயோகம் என்று கூறியுள்ளார். இதுவே பிற்காலத்தில் தாந்திரிக வழிபாடு என அழைக்கப்படுகிறது.[7]

**பாலியல் சிற்பங்கள்**

ஒருவன் காமம் என்ன வென்று முழுமையாகத் தெரிந்து கொண்டால் தான் அதிலிருந்து விடுபடமுடியும். இல்லாது போனால் சமயம் வாய்க்கும் போது அந்த உணர்வு மேலோங்கிதடு மாறிவிடும் நிலை ஏற்படும். வாழ்வும் முழுமைபெறாது. இந்த உண்மையை இந்திய சிற்பிகள் உணர்ந்திருந்ததால் தான் பாலியல் சிற்பங்களில் சங்கலிகரணச் சிற்பங்களைக் காட்டியுள்ளனர். புராணங்களிலும் விலங்கு உருவமும் மனித உருவமும் கலந்த உருவங்களைப் பற்றியும் அறிய முடிகிறது.


© 2024, IRJTSR

தமிழ் நாட்டில் சங்ககாலத்தில் காமக்கடவுளுக்குத் தனிக்கோயில் இருந்துள்ளது. [8]அதற்குப் பிற்பட்டகாலக் கோயில்களில் ஆலிங்கனமூர்த்தி, யோனி சிற்பங்கள் காணப்படினும் விஜயநகர – நாயக்கர் காலக்கோயில்களில் தான் பாலியல் சிற்பங்கள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. நாயக்கர்கால (பொ.ஆ. 16–18ஆம் நூற்றாண்டு) சமுதாயத்தில் போகத்திற்கு அதிக அளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, நாயக்கர் காலம்கலை வரலாற்றில் "பாலியல் சிற்பங்களின்காலம்" (Erotic age) என அழைக்கப்படுகிறது.

**சின்னையம் பேட்டை சிற்பங்கள்**

தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம் பட்டு வட்டத்தில் சின்னையம் பேட்டை என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூர் செஞ்சி நாயக்கர் ஆட்சிக்குட் பட்ட சின்னையன் என்னும் குறுநில மன்னன் ஆண்டுவந்தான். இவனது பெயரில் பொ.ஆ. 16–17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தகுளம் இவ்வூரின் நடுவில் அமைந்துள்ளது. அக்குளத்தின் தளங்கள், படிக்கட்டுகள், மதிற்சுவற்றில் இதிகாசம், புராணக்காட்சிகள், இயற்கைக்காட்சிகள், காதற்களியாட்டக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. அவை உள்நாட்டுக் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் சுமார்நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நாயக்கர் காலசமுதாயத்தை தெள்ளத்தெளிவாக எடுத்தியம் புகிறது. இதில் வட்டாரத் தன்மையின் செல்வாக்கினைக் காணலாம்.[10]

சின்னையன் பேட்டை குளத்திலுள்ள சிற்பங்கள் பாலுறவின் பல்வேறு நிலையினைக் காட்டுவதாய் அமைந்துள்ளன. பாலுறவு சம்பந்தப்பட்ட வியாதிகளும் குறிப்பாக ஓதம், கருக்கலைத்தல் போன்ற காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இதில் இயற்கைக் குப்புறம்பான சில பாலுறவுக் காட்சிகளும் காணப்படுகின்றன. மனிதன் விலங்குகளுடனும், விலங்குகள் மனிதர்களுடனும் உறவுகொள்ளும் முறையிலாப் புணர்ச்சியாகும். நாய், ஆடு முதலிய விலங்குகள் பெண்களுடனும், கழுதை, குதிரை போன்ற விலங்குகளுடன் ஆண்களும் உறவு கொள்ளும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு காட்சியில் சிந்து சமவெளி முத்திரையில் காணப்படும் சங்கலிகரணம் சிற்பமும் காணமுடிகிறது.

**பாலியல் கல்வி அறிவு**

சின்னையன் பேட்டை மிருகப் புணர்ச்சி சிற்பங்கள் அடக்கப்பட்ட உணர்வுகள் மேலெழுவதைக் காட்டுகிறது. இவ்வுணர்வு கோபம், வன்முறையாகவும் மாறவாய்ப்புள்ளது. இதனை அடக்க வேண்டும். மோட்சத்தை (இறைவனை) அடையவிரும்பு பவன் உண்மையை அறிதலைக் காட்டிலும், உணர்வுகளை அடக்கு வதன் மூலம் அடையமுடியும். இதனால் தான் கஜுராஹோ கோயில் வெளிப்புறச் சுவர்களில் மட்டும் கலவிச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. [11]இவற்றைக் கடந்தால் தான் ஆன்மா ஒடுங்குகின்ற இறைவன் எழுந்தருளும் இடமாகிய கருவறையை அடைய முடியும் என்பதே இதன் அடிப்படை நோக்கமாகும். கோயில் சமயவழிபாட்டுத் தலமாக மட்டு மின்றி மக்களுக்கு அறிவு புகட்டும் கல்விச்

சாலையாகவும் திகழ்கிறது. அக்காலத்தில் பத்திரிக்கைகளோ, பிறதகவல் தொடர்புச் சாதனங்களோ இல்லை என்பதால் மக்களுக்கு பாலியல் தொடர்பான அறிவினைப்பு கட்டுவதற்காகக் கோயில்களில் இத்தகுசிற்பங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**நாயக்கர் ஆட்சி**

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து நடை பெற்ற படையெடுப்புகளால் மக்கள் நேரடித்தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். [12]எனவே, சமுதாய வாழ்க்கை அமைதியற்றதாக இருந்தது. சாதிப்பாகு பாடுகள் வலுப்பெற்றன. வேசித்தொழில் பரவியிருந்தது. நாட்டில் விபச்சாரம் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. நாயக்கர் காலசமுதாயம் பொருளற்ற சடங்குகளாலும் கண்மூடிப் பழக்கங்களாலும் அலைப்புண்டும் பிளவு பட்டும் கிடந்தது. இத்தகைய சூழலே நாயக்கர்கால கலைகளில் மிதுனப் பண்பு மேலோங்கக் காரணமாக இருந்திருக்க வேண்டும். கலைஞனின் படைப்பில் அரசின் கட்டுப்பாடு குறைந்துள்ள நிலையையே சங்கலிகரணம் சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**நாட்டுப்புறப் பண்பாடு**

சின்னையம் பேட்டை சிற்பங்கள் நாட்டுப்புற மக்களின் பண்பாட்டினை வெளிக்கொணர்கின்றன. அரண்மனை வாழ்க்கைச் சூழலின் எதிரானசராசரி மனிதர்களின் வாழ்க்கையை வெளிக்காட்டுவனவாகவே அமைகின்றன. உள்நாட்டு சிற்பிகளால் இவை செதுக்கப்பட்டுள்ளன. கலவிசார்புடைய விளக்கப் படங்களாகக் காட்சியளிக்கின்றன. இயற்கை வடிவங்கள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மனித உடற் கூறு சம்பந்தப்பட்ட விவரங்களும் இதில் அடங்கும். வரிச்சுமையாலும் பஞ்சங்களாலும் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தனர். காமம் சமூகநலன் நோக்கிய சமயச்சடங்காகவே உருவாகியது. [12]ஆண், பெண் உறவு நிலையில் பக்தியை விளக்கியவல்லபக் கொள்கை வலுப் பெற்றது. [13]சக்தி வழிபாடு தனித்துவம் பெற்றது. அதன் ஒரு கிளையான தாந்திரீகம் வளர்ச்சி பெற்றது. இந்து தாந்திரீகம், முறைசாராதயோக வடிவமேயாகும். இது ஆண், பெண் பாலுறவு நிலையில் பெறும் அனுபவம் அல்லது உணர் தலை முன்னிலைப் படுத்திற்று. தாந்திரீக சமயத்தின் அடிப்படைத் தன்மைகள் நாயக்கர் காலசமுதாயத்தின் அடிவோட்டங்களில் இருந்துள்ளது.[14]

**விலங்குகள் வதைத்தடுப்புச் சட்டம்**

இந்திய பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்வது ஆன்மீகமாகும். இந்தியர்கள் தங்களது வாழ்வியல் நிகழ்ச்சிகளை சமயக்கண்ணோட்டத்துடனே உற்று நோக்கியுள்ளனர். ஆகையால் மிருகப்புணர்ச்சியையும் சமய அடிப்படையிலேயே கண்டுள்ளார்கள். நாட்டுப்புற வழக்கில் இன்றும் மனிதன் நாய், கழுதை போன்ற விலங்குகளைத் திருமணம் செய்து கொள்ளும் மூட நம்பிக்கை

மக்களிடையே காணமுடிகிறது. வளம்கருதியும், மழை வேண்டியும், விலங்குகளின் சாபம் நீங்கவும் இத்தகைய திருமணம் மேற்கொள்வதாகக் கூறுகின்றனர். மேலெழும்பும் காம உணர்விற்கு ஆட்பட்ட ஒரு சிலர் தங்களது வளர்ப்புப் பிராணிகளான நாய், பூனை, கழுதை போன்றவற்றை பாலுறவுக்குப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய செயல் தற்போது விலங்குகள் வதைத்தடுப்புச் சட்டத்தின் கீழ்தடை செய்யப்பட்டுள்ளது.[15]

**முடிவுரை**

எனவே, இயற்கை மனிதனுக்கு அளித்தகாம உணர்வை அடக்கி, கற்பு நெறிதவறாமல் மனையறத்தின் மாண்பினை உணர்த்த நாயக்க மன்னர்கள் இத்தகைய சிற்பங்களை மனிதர்கள் கண்டுணர்ந்து தீயவழியில் செல்லாமல் நல்லறிவைப் பெறும் வகையில் இச்சிற்பங்கள் அமைந்துள்ளது பாராட்டுதற்குரியதாகும்.

**சான்றெண்விளக்கம்**


[1] **Tamil Lexicon,** Vol. III, University of Madras, Madras, 1982, p. 1224, Vol. V. p. 3201.

[2] Daisy, **Bestiality in Ancient Civilizations,** Aug. 25, 2014.

[3] Philip Rawson, **Indian Art,** Studio Vista / Dutton Pictureback, New York, 1972, pp. 8 – 9.

[4] ஸ்வாமி, **இந்துதருமவாழ்க்கையும்தத்துவங்களும்,**அனுராகம், சென்னை, 1991, ப. 96.

[5] RajuKalidas, “Yoninilaya – concept and Application in South Indian Art”, **East and West,** Vol. 40, Nos. 1 – 4 (Dec. 1990), pp.115-200.

[6] திருவாரூர்பஞ்சநhததியாகசுந்தரம், **ஆன்மீகமும்அறிவியலும்,**கங்கைபுத்தகநிலையம், சென்னை, 1994, ப. 406.

[7] **திருமந்திரம்,**மூன்றாம்தந்திரம், 19, பரியங்கயோகம், பாடல்கள் 825 – 844.

[8] **சிலப்பதிகாரம்,** 9:59.

[9] சா. பாலுசாமி, **நாயக்கர்காலக்கலைக்கோட்பாடுகள்,**காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில், 2013, ப. 43.

[10] **மேலேசுட்டப்பட்டநூல்**, ப. 166.

[11] Sisir Kumar Mitra, **The Early Rulers of Khajuraho,** K.4, Mukhopadhyay, Calcutta, 1958, pp.218-219.

[12] R. SathyanathaAiyar,**History of the Nayaks of Madura,**Humphrey Miford, Oxford University, Press, Oxford, 1924, pp.253-255.

[13] கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, **தென்னிந்தியவரலாறு,**இரண்டாம்பாகம், மு.ரா. பெருமாள்முதலியார் (மொழிபெயர்ப்பாளர்), தமிழ்நாட்டுப்பாடநூல்நிறுவனம், சென்னை, 1989, ப. 200.

[14] அ. இராமசாமி, **நாயக்கர்காலம்வரலாறும்இலக்கியமும்,**உயிர்மைபதிப்பகம், சென்னை, 2009, பக். 210–212.

[15] **விலங்குகள்கொடுமைதடுப்புச்சட்டம்**, சட்டஎண். 59/1960,
அத்தியாயம் I – 3, ப. 16.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR